
திராவிடத்தால் வாழ்கிறோம்

1289

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்



- வாழ்வோம்

பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

123

''கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''

'தமிழில் பிழையின்றிப் பேசுங்கள்' என்றுதானே தி.மு.க.வின் சட்டமன்ற உறுப்பினர் ராஜேந்திரன் பேரவையில் சொன்னார். அதற்கு, நிதி அமைச்சர் மரிய வில்சன் ஆவேசமாகப் பதில் சொல்லி, மைக்கை அடித்திருக்கிறாரே?

தி.மு.க.வின் சட்டமன்ற உறுப்பினர் பேசும்போது, பள்ளிக் கல்வித் துறை அமைச்சராக இருக்கும் பட்டிமன்றப் பேச்சாளர் ராஜ்மோகன், தமிழில் நன்றாகப் பேசுகிறார் என்று சுட்டிக் காட்டினார். த.வெ.க. அமைச்சர்களுக்குள் வெளியில் தெரியாத 'கட்டா குஸ்தி' நடந்து கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில், ஒப்பீடு செய்வதாக நினைத்து, தி.மு.க. உறுப்பினர் உண்மையைப் பேசியதால், நிதி அமைச்சருக்கு மூக்கின் மேல் கோபம் வந்துவிட்டது.

த.வெ.க. அரசின் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த மரிய வில்சன், தமிழ்ச் சொற்களைப் பிழையாக உச்சரித்தது மட்டுமின்றி, எண்களைக்கூட தப்பும் தவறுமாகத்தான் படித்தார். ஒரு திட்டத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைப் புரிந்துகொள்ள முடியாத வகையில், அவருடைய உச்சரிப்பு இருந்தது. நீண்ட நேரம் அறிக்கைகளைப் படிக்கும்போது, உச்சரிப்பில் பிழைகள்



'ஏமாற்றுவதையே மாற்றம்' என்றவர்களின் ஆவேசம்!

ஏற்படுவது இயல்புதான். திருத்தம் செய்து கொண்டு, சரியாகப் படிப்பதுதான் அமைச்சர்களின் வழக்கம். நிதியமைச்சரோ, தனக்கு ஆங்கிலத்தில்தான் பயிற்சி அதிகம் என்கிறார். தமிழில் எண்ணிக்கையைக் குறிப்பிடுவதில் சிரமம் இருந்தால், ஆங்கிலத்தில் குறிப்பிடலாம். அவர் அப்படிச் செய்யவில்லை. மாறாக, தனது பிழையைச் சுட்டிக்காட்டிய தி.மு.க.வின் சட்டமன்ற உறுப்பினரை நோக்கி, எனக்குத் 'தடுப்பாட்டம்', 'தாக்குதல் ஆட்டம்' இரண்டும் தெரியும் என்று தாறுமாறாகக் கோபத்தைக் காட்டியிருக்கிறார், ஏற்கெனவே, தனது சொந்த சகோதரர் குடும்பத்தின்மீது, உருட்டுக்கட்டையுடன் பாய்ந்தவரான மரிய வில்சன்.

அத்துடன் அவரது தாக்குதல் ஆட்டம் நின்றுவிடவில்லை. "எனக்கு ஒரு மொழியை, எனது கிறிஸ்தவம் கற்றுக்கொடுத்துள்ளது. அது 'அன்புமொழி', அமைதி மொழி, இரக்கத்தின் மொழி. இது பாதிபேருக்கு எவ்வளவு தமிழ் படிச்சாலும் தெரியாது. நான் பைபிளைப் படித்திருக்கிறேன்" என்று தேவையின்றி, தனது தனிப்பட்ட அடையாளங்களை முன்னிறுத்தி, தமிழைப் பிழையாகப் பேசியதை நியாயப்படுத்த முயற்சி செய்திருக்கிறார் நிதி அமைச்சர் மரிய வில்சன். அன்பு மொழி பேசும் 'பைபிள்' எனும் 'திருவிவிலியம்' தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, பல இலட்சம் படிகள் இன்றும் படிக்கப்பட்டு வருகின்றன. வீரமாமுனிவர் என்கிற கான்ஸ்டன்டினோ ஜோசப் பெஸ்கி எழுதிய 'தேம்பாவணி', ஹென்றி ஆல்பர்ட் கிருஷ்ணப் பிள்ளை எழுதிய 'இரட்சண்ய யாத்திரிகம்', கவியரசு கண்ணதாசனின் 'இயேசு காவியம்' உள்ளிட்ட பல தமிழ் நூல்கள் அன்பு-கருணை-இரக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் விவிலியத்தின் சாரத்தைத் தருபவையாகும். மரியவில்சன் தமிழைத் தாழ்த்துவதன் நோக்கம் என்ன?

பேரவையில், தமிழ்த்தாய் வாழ்த்துக்கான தனித் தீர்மானத்தை, விஜய் முன்மொழிந்த அதே நாளில், 'தமிழைத் தப்பாகத்தான் பேசுவேன். என்னை மாற்றிக்கொள்ள முடியாது' என்று அவரது நிதியமைச்சர் வழிமொழிந்திருக்கிறார். 'தமிழ்தான் உயிர், உணர்வு என தீர்மானத்தை முன்மொழிந்த விஜய், அமைச்சரின் முரணான போக்கைக் கண்டும் காணாமல் இருப்பது ஏன்? தவிர, இதற்கு விளக்கம் அளிக்கிறேன் என்கிற பெயரில், தவற்றை ஒப்புக்கொள்ளாமல், "ஆவேசப்பட்டு விட்டேன்" என சப்பைக்கட்டு கட்டுகிறார் அமைச்சர். 'ஏமாற்றுவதையே மாற்றம்' என்றவர்கள், 'ஆவேசத்துடன்' அம்பலப்படுகின்றனர் என்பதுதான் உண்மை.

...வினா தொடரும்.



படக்கதை வடிவில் பெரியார் - அண்ணா!

திராவிட இயக்க வரலாற்றை இளந்தலைமுறைக்குக் கொண்டுசெல்ல வேண்டியது காலத்தின் தேவை என்பதை அறிவோம். அதிலும் குறிப்பாக, வளரிளம் பருவத்தினருக்கு நூற்றாண்டு வரலாற்றைக் கொண்டுசேர்ப்பதன் மூலமே, இன்றைய சூழல் எதிர்கொண்டுள்ள அரசியலற்றத் தலைமுறை என்கிற அபாயத்தினை முறியடிக்க முடியும். அந்த வகையில், வரலாற்றை நூல்களாக, காணொலிகளாகக் கொண்டுசேர்க்கும் பல முயற்சிகள் நடைபெற்றுவரும் நிலையில், விஜயபாஸ்கர் அறக்கட்டளையும் சி.ஐ.எஸ்.எஸ் என்கிற அமைப்பும் இணைந்து, குழந்தைகள் வாசிக்கும் வகையில் படக்கதை நூல்களை வெளியிட்டுள்ளன.

'ஏன் என்று கேட்கச் சொன்னவர்' என்கிற தலைப்பில் பெரியாரின் வரலாறும், 'ஒரு குருகுலத்தின் கதை' என குருகுல போராட்ட வரலாறும், 'அண்ணா தந்த தமிழ்நாடு' என பேரறிஞர் அண்ணா குறித்தும் சிறார் வாசிக்கும் வகையில், படக்கதை வடிவில் சிறு நூலாக வெளியிட்டுள்ளனர். இதே நூல்களை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளனர். குழந்தைகளுக்குச் சமூக நீதி பற்றிய புரிதலைக் கொண்டுசேர்ப்பதன் மூலம் ஆரோக்கியமான தலைமுறை உருவாகட்டும். ஒரு நூலின் விலை ரூ.50 https://periyarbooks.com/ என்கிற இணையதளம் வழியாக நூல்களை வாங்கலாம். செல் போன் : 84284-55455 என்கிற எண்ணுக்கும் தொடர்புகொள்ளலாம்.

அவர்தான் முதலமைச்சர்

மாற்றம் ⇆ ஏமாற்றம்!



ப்ளாஷ்பேக்



அ.மு.ரமீஸ்

மூன்றாவது தலைமுறை கழகக் குடும்பம்!

1969-ஆம் ஆண்டில், அன்றைய காஞ்சிபுரம் மாவட்டம், இன்றைய சென்னை மாவட்டம் ஆலந்தூர் கழகப் பிரதிநிதியாக இருந்த எனது தாத்தா பா.மு. இஸ்மாயில் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞரைச் சந்தித்த புகைப்படம். அவரது வழியில் எனது தந்தை இ.மு.அக்பர் அவர்கள், ஆலந்தூர் நகர இளைஞர் அணித் துணை அமைப்பாளராக, 1998-ஆம் ஆண்டில் இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்களுடன் இருக்கும் படம். அவரது வழியில், கழகத்தில் செயல்பட்டுவரும் நான், 2021-ஆம் ஆண்டில் சேப்பாக்கம் பகுதி தகவல் தொழில்நுட்ப அணியின் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டபோது, இளைஞர் அணிச் செயலாளர் அண்ணன் உதயநிதி அவர்களிடம் வாழ்த்துப் பெற்றபோது எடுத்த படம். இன்று என் பிறந்தநாளில், இந்தப் படங்களைப் பகிர்ந்துகொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். மூன்றாவது தலைமுறையாக, 'குடும்பமே கழகம், கழகமே குடும்பம்' என வாழ்வதில் பெருமையடைகிறேன்.

- அ.மு.ரமீஸ், தகவல் தொழில்நுட்ப அணி பகுதி ஒருங்கிணைப்பாளர், சேப்பாக்கம் பகுதி, சென்னை மேற்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

நகராட்சி மன்றங்களை வென்ற கழகம்!

1964-ஆம் ஆண்டு நடைபெற்ற நகர்மன்றத் தேர்தல்களில், தமிழ்நாட்டின் பல நகர்மன்றங்களைக் கழகம் கைப்பற்றியது. காஞ்சிபுரம், ஆரணி, பொள்ளாச்சி, சிதம்பரம், திருநெல்வேலி, வேலூர், திருப்பத்தூர், மயிலாடுதுறை, ஆம்பூர் எனப் பல நகர்மன்றங்களில் கழகத்தினர் நகர்மன்றத் தலைவர்களாகப் பொறுப்பேற்றனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900